**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 296** **நாள் : 05.10.2025**

**மெரினா நீச்சல் குளம் 07.10.2025 செவாய்க்கிழமை முதல் மீண்டும் பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறக்கப்படுகிறது.**

மெரினா நீச்சல் குளத்தில், தண்ணீர் சுத்திகரிப்பு கட்டமைப்பினை ஏற்படுத்துதல், மாற்றுத்திறனாளிகள் நடந்து செல்வதற்கான சிறப்புப் பாதை அமைத்தல், தனி கழிவறை மற்றும் மாற்றுத்திறனாளிகள் நீச்சல் குளத்தில் இறங்கி குளிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்துதல் உள்ளிட்ட பராமரிப்புப் பணிகளுக்காக கடந்த 11.07.2025 முதல் தற்காலிகமாக மூடப்பட்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது,

ரூ.2.50 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்ட இப்பராமரிப்பு பணிகள் முடிவுற்ற நிலையில், மெரினா நீச்சல் குளம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மீண்டும் 07:10.2025 செவாய்க்கிழமை முதல் திறக்கப்படுகிறது. இந்த நீச்சல் குளமானது காலை 5.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை செயல்படும். காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை பெண்களுக்கான நேரமாகும்.

இந்த நீச்சல் குளத்தில் குளிப்பதற்கு QR Code மூலம் நேரம் நிர்ணயம் செய்தல் மற்றும் கட்டணம் செலுத்தும் வசதி உள்ளது. இந்த நீச்சல் குளத்தில் 1 மணி நேரத்திற்கு பெரியவர்களுக்கு ரூ.50/- எனவும், இதனை ஆன்லைனில் பதிவு செய்பவர்களுக்கு 10 சதவீதம் சிறப்புச் சலுகையாக ரூ.45/-ம், 12 வயது முதல் 14 வயது வரையுள்ள சிறுவர்களுக்கு ரூ.30/- எனவும், ஆன்லைனில் பதிவு செய்பவர்களுக்கு 10 சதவீதம் சிறப்புச் சலுகையாக ரூ.25/-எனவும் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை பராமரிப்புப் பணிகளுக்காக வார விடுமுறையாகும்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**